RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1332

# நற்றிணையில் உவமவியல் கோட்பாடு

**த. புவனேஸ்வரி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துடன், இணைவுபெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

# The Theory of Allegory in Natrinai

**T. Bhuvaneswari [a, *]**

[a] Department of Tamil, A.P.C Mahalaxmi College for Women (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi–628002, Tamil Nadu, India

* Corresponding Author: t.yavana@gmail.com

Received: 16-06-2022
Revised: 19-08-2022
Accepted: 14-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

The period of Sangam literature was preceded by the Natrinai period, the first literary work compiled. It is a book that combines literary richness with grammatical richness. The parables in the narrative add beauty to the songs in abundance and detail. This thesis is intended to explain how the parable, which is composed of numbers and details, makes sense in the poems. The tendency to compare one thing with another is a natural characteristic of all human beings. The operation of this mindset can be explained at various levels. In terms of grammar, simile, the construction of simile, and allegory are parts that reflect the comparative attitude. In this, Tolkappiyar's thoughts on similes and the way in which the Natrinaipulavars have used the metaphor are explained in this article. This article is also a precursor to later grammatical studies.

**Keywords:** Parable & Simile, Litertature, Analytical Perfomance.

## முன்னுரை

நல் எனும் அடைமொழியேற்ற நற்றிணை இலக்கியம் 401 பாடல்களுடன் ஆசிரியப்பாவால் இயற்றப்பெற்றது. பன்னாடு தந்த மாறன் வழுதியால் தொகுப்பிக்கப்பட்ட இவ்விலக்கியம் ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடிகள் எல்லை வரையினை உடையது. அகப்பொருள் இலக்கியமாதலின் உவமையும் உள்ளுறையும் உள்ளடக்கமாக அமைந்து சிறப்பு செய்கிறது. அகப்பொருள் சார்ந்த பாடல்களில் பொருளைப் புலப்படுத்த உவமப்பகுதியே முதன்மைக்காரணியாக அமைந்துள்ளது எனலாம். தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் அகத்திணையியலில் உவமம் குறித்து சுருக்கமாக குறிப்பிட்டுள்ளார். அதன் விளக்கங்களை உவமவியலில் விளக்கியுள்ளார். உவமத்தொகை குறித்த செய்திகளை சொல்லதிகார எச்சவியலில் விளக்கியுள்ளார் (Vellaivaranar, 1917).

## ஆய்வு அணுகுமுறைகள்

நற்றிணை இலக்கியமானது சொல்தொறும் பொருளும் நுண்பொருளும் திரட்சியை உடைய நூலாகும். ஒரு பொருளை ஒரு பொருளோடு ஒப்புமைக் கூறுவதாக அமையும் உவமை இலக்கிய வரிகளில் பொருள்நயம் சேர்ந்துள்ளது. உவமைத்தொகை. உவமவிரி விளக்கமுறை. பகுப்பாய்வு திறானய்வு முறைகளில் சொல்லிலக்கணத்தின் உவமவியல் கோட்பாட்டின் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமையவுள்ளது.

## நற்றிணை மூலமும் உரையும்

எட்டுத்தொகையுள் முதலாவதாகிய நற்றிணை. உள்ளுறை. இறைச்சி. குறிப்பு. அங்கதம் என்ற பல உறுப்புகளால் பின்னப்பட்ட அழகு பொருந்திய இலக்கியம். தமிழர்தம் அறிவு. வினைத்திறம். வாழ்வியல் நலம். உள்ளச்செம்மை அனைத்தும் நற்றிணை இலக்கியத்தில் வெளிப்பட்டுள்ளன. இந்நூலில் பாடல்களைப் பாடியோர் எண்ணிக்கை 187 என்றும். இலக்கண வளம் நிறைந்தது என்றும் நூலில் குறிப்பிட்டுள்ளார் (Balasubramniam, 2004). நற்றிணைச் செய்யுள் தொடர் ஒவ்வொன்றும் உட்புதைந்து நிற்கும் பொருட்சிறப்பெல்லாம் கிளந்து கூறும் சிறப்பான நூலாகும் (Janaki, 2011).

## உவமவியல் கோட்பாடு

தொல்காப்பிய பொருளதிகாரத்தில் ஏழாவது இயலாக அமையப்பெற்ற உவமவியலில் உவமம். உவம உருபுகள் பற்றிய குறிப்பகள் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியர் காலம் தாண்டிய தண்டயலங்காரமும் பொருளணியியலில் 'பண்பு. தொழில். பயன் காரணமாக ஒன்றாகியும். பலவாகியும் வரும் பொருளொடு பொருள் இயைய வைத்து ஒப்புமைப்புலப்படப் பாடுவது உவமையணி எனும் அலங்காரமாகும்.'என்று குறிப்பிடுகின்றது. தண்டியலங்காரம். பொருளதிகாரம்நூ.31. அணியிலக்கண நூலாரால் குறிப்பிடப்படும் உருவகம் உவமையின் வளர்ச்சி நிலையேயாகும். உவம உருபுகள் பாடல்களில் வெளிப்படையாக அமைவது உவமவிரியாகவும், மறைவாக தொடர் பொருள் போன்று பாடல்களில் புலப்படுவது உவமத்தொகையாகவும் குறிப்பிட்டுள்ளது. இலக்கியத்தின் இனிமையை உணரச்செய்வதாக அமையும் இந்த உவமநயம் நற்றிணைப்பாடல்களிலும் காணப்படுகின்றது.

பண்பையும். தொழிலினையும் விளக்கிக் கூறும் உவமவியலில் "உவமம் பொறிகளுக்கு புலனாகக் கூடியதும், மனதால் உணரக் கூடியதுமாக இருநிலைகளில் அமையும். பொருளதிகார அகத்திணையியலில். உள்ளுறை உவமம். ஏனை உவமம் என்ற இரு நிலைகளில் ஐந்திணைக்கும் பொதுவாக அமையும்" என்று கூறுகின்றது.

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே

வகைபெற வந்த உவமைத் தோற்றம்"

சொல்லதிகார எச்சவியலில் உவமைத்தொகையினை உவம உருபு தொடர்பொருள் போன்று பொருள் உணர்த்தியதாகும் என்று குறிப்பிட்டுள்ளது (Perasiyar, 2005). உவமம் குறித்த கருத்துக்கள் பிற்கால அணியியலுக்கு முன்னோடியாகும். (Ilampuranar, 2005)

## இலக்கியங்களில் உவமை பெறுமிடம்

இலக்கியங்களில் தலைவன். தலைவி. தோழி முதலியோர்க்கு உவமை குறிப்பிடும் இடங்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன என்பார் இளம்புரணர். அகப்பாடல்கள் அனைத்தும் தனிமனிதனுடைய அனுபவங்கட்கு மட்டும் வடிவு கொடுக்காமல் உலகில் உள்ள மக்கள் அனைவருடைய அனுபங்கட்கும் வடிவு கொடுப்பன போல் அமைந்துள்ளது என்பார் பேராசிரியர் ஹட்சன். (W.H. Hudson, Introduction of the study of literature). இக்கருத்து தமிழ் இலக்கியங்களைப் பொறுத்தவரை முற்றிலும் உண்மை என்பார் அ.ச. ஞானசம்பந்தன். (1994:264). மகிழ்ச்சியினை வெளிப்படுத்தும் கூற்றுகளும். புலவி பயக்கும் கூற்றுகளும் உவம நயத்தில் தோன்றும். உவமப்பொருளை தலைமகள் கூறுங்கால் அவளறிந்த இருநில பொருள்களையே உவமையாக கூறுதற்குரியவளாகிறாள் என்பார் இளம்புரணர். இதனை.

"கிழவோட் குவமை ரிடுத்து வத்தே"

என்று குறிப்பிட்டுள்ளார் (Ilampuranar, 2005).

## நற்றிணையில் உமமம்

உவமையெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும். எனவே உமமிக்கப்படும் பொருள் இழிந்த பொருளாக இருப்பினும் உயர்ந்த குறிப்புப்பட சொல்லப்பட வேண்டும் என்று பேராசிரியம் விளக்கமளிக்கிறது. பிற்கால அணியிலக்கண நூலாரால் கூறப்படும் உருவகம் உவமையின் பகுதியேயாகும். நற்றிணை இலக்கியத்தில் உவம உருபுகள் விரியாகவும், தொகையாகவும் அமைந்து பொருள் சேர்த்துள்ளது.

## உவம விரி

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள உவம உருபுகள் முப்பத்தியாறினுள்.

“அவைதாம்

அன்ன ஏய்ப்ப உறழ ஒப

என்ன மான என்றவை யெனாஅ

கூறுங் காலைப் பல் குறிப்பினவே”

அன்ன முதலாக சொல்லப்பட்ட எண்வகை சொற்களும் தொழில்நிலை சுட்டும் வினையுவமத்திற்குரியதாகவும். ‘எள்ள முதலான எண்வகை பயனிலையுவம உருபுகளும். கடுப்ப முதலான எண்வகை மெய்யுவம உருபுகளும். போல முதலான எண்வகை உவம உருபுகளும் (Ilampuranar, 2005). நற்றிணைப் பாடல்களில் வளம்சேர்க்கும். உதாரண நிலையில் உவம உருபுகளின் பொருண்மைக்கேற்ப ஓரிரண்டு பாடல்களே கொடுக்கப்பட்டுள்ளன.

நற்றிணையில் கபிலர் இயற்றிய குறிஞ்சித் திணைப் பாடலில்,

“தாமரை தண் தாது ஊதி, மீமிசைச்

சாந்தில் தொடுத்த தீம் தேன் போல”

நற்றிணை முலமும் உரையும்.

தேனீக்கள் தாமரையின் குளிர்ந்த மகரந்தங்களை ஊதி. சந்தன மரத்தின் உச்சியில் கொண்டு சென்று சேர்த்து வைத்த தேனைப்போல. உறுதியாக உயர்ந்தது தலைவனிடம் தான் கொண்ட **‘நட்பு’** என்ற பொருளில் வினையுவம உருபு நலன் எனும் நிலைகளனில் உமவவிரியாக பொருளுணர்த்தியுள்ளது (Ilampuranar, 2005).

பயனுவம உருபு

“எள்ள விழைய புல்ல பொருவ

கள்ள மதிப்ப வெல்ல வீழ

என்றாங் கெட்டே பயனிலை யுவமம்” (Ilampuranar, 2005)

பயனுவம உருபான இவற்றினோடு ‘அன்ன’ எனும் உருபும் அமையும்.

“பழையன் வேல் வாய்த்தன்ன நின்

பிழையா நல்மொழி தேறிய இவட்கே”

என்ற பாலைத்திணைப் பாடலில் பழையன் எனும் சிற்றரசனின் தப்பாத வேற்படையினைப் போன்று. தலைவனின் மொழிகள் தப்பாதவை என்று தலைவி எண்ணுகிறாள் என்ற பொருளில் ‘நலன்’ என்ற நிலைகலனில் பொருளுணர்த்தியுள்ளது (Balasubramniam, 2004).

## மெய்யுவம உருபு

“கடுப்ப முதலா எண்வகை மெய்யுவம உருபுகள்” (Ilampuranar, 2005)

பரணர் இயற்றிய குறிஞ்சித்திணைப் பாடலில்

“குவளை அன்ன ஏந்து எழில் மழைக்கண்”

என்ற செய்யுளில் அழகிய கண்கள் என்ற பொருளில் ‘அன்ன’ எனும் மெய்யுவம உருபானது ‘காதல்’ எனும் நிலைகளனில் மெய் உவம விரியாக பொருள் உணர்த்தியுள்ளது (Balasubramniam, 2004).

“திருமணி புரையும் மேனி மடவோள்”

என்ற பாடலில் நீலமணி போன்ற உடல் என்ற பொருளில் மெய்யுவம உருபான ‘புரை’ என்ற நிலைகளனில் அமைந்துள்ளது (Balasubramniam, 2004).

## உருவுவம உருபு

‘அன்ன’ எனும் வினையுவம உருபானது பயன். மெய். உரு என்ற உவம உருபுகளோடும் பொருந்தி அமையும் (Ilampuranar, 2005).

இளங்கீரனார் இயற்றிய பாலைத்திணைப் பாடலில்,

“கட்டளை அன்ன இட்டு அரங்கு இழைத்து

கல்லா சிறாஅர் நெல்லி வட்டு ஆகும்”

என்ற பாடலில் சிறுவர்கள் பொன்னை உரைத்து மாற்றுப் பார்க்கும் கல்லைப்போன்றஆடுகளத்தைக் கீறிக் கொண்டு நெல்லிக்காய்களை வட்டாக கொண்டு ஆடுவர் என்ற பொருளில் உருவுமாக ‘வலி’ எனும் நிலைக்களனில் (ஒரு பொருளுக்குத்தன் தன்மையில் உளதாகிய ஆற்றல்) விரியாக அமையப் பெற்றுள்ளது (Balasubramniam, 2004).

## உவமத்தொகை

உவம உருபுகள் தொகையாக பாடல்களில் மறைந்து நின்று பொருளுணர்த்துதலுமுண்டு. அவ்வகையில் நற்றிணைப் பாடல்களில் அமைந்த உவமத்தொகை சொற்களும். அவற்றின் நிலைகளன்களும் குறித்துக் காண்போம்.

## வினை உவமத்தொகை

கபிலர் இயற்றிய குறிஞ்சித் திணைப் பாடலில்.

“நல்ல பெருந் தோளோயே! கொல்லன்

எறி பொன் பிதிரின் சிறுபல தாஅய்

வேங்கை வீ உகும் ஓங்கு மலைக் காட்சி”

என்ற பாடலில் ‘அன்ன’ என்ற வினையுவம உருபு தொகையாக. கொல்லனின் உலைக் களத்தில் அடிக்கும் இரும்பின் பொறி சிதறுமாறு போலச். சிறிய பல காயையுடைய வேங்கை மரத்தின் மலர்கள் உதிரும் என்ற பொருளில் ‘வலி’ என்ற நிலைகளனில் பொருளுணர்த்துகிறது (Balasubramniam, 2004).

## பயனுவமத்தொகை

சிறைக்குடி ஆந்தையார் இயற்றிய பாலைத்திணைப் பாடலில்.

"உரியை வாழி என் நெஞ்சே! பொருளே

வாடாப் பூவின் பொய்கை நாப்பண்

ஓடுமின் வழியின் கெடுவ: யானே"

பொருளானது விடாத மலரையுடைய பொய்கையிடத்தில் ஓடுகின்ற மீனின் வழியைப் போலத் தாம் இருந்தவிடம் தெரியாமல் கெடும் என்ற பொருளில், 'விழைய' என்ற பயனுவம உருபு தொகையாக 'நலன்' என்ற நிலைகளனில் பொருள் உணர்த்தியுள்ளது (Balasubramniam, 2004).

## மெய்யுவமத் தொகை

நொச்சி நியமங்கிழார் இயற்றிய குறிஞ்சித்திணைப் பாடலில்,

"உரைத்தல் உய்த்தனனே - தோழி! - சாரல்

காந்தள் ஊதிய மணி நிறந் தும்பி

தீம் தொடை நரம்பின் இமிரும்

வான் தோய் வெற்பன் மார்பு அணங்கு எனவே"

மலைச்சாரலில் உள்ள காந்தளின் தேனை உண்ட நீரமணி போன்ற நிறத்தையுடைய வண்டு யாழின் நரம்பைப்போல ஒலிக்கும் என்ற பொருளில் 'நிகர்ப்ப' என்ற மெய்யுவம உருபு தொகையாக 'காதல்' என்ற நிலைகளனில் பொருளுணர்த்தியுள்ளது (Balasubramniam, 2004).

## உரியுவமத்தொகை

நற்றிணையில் அமைந்த குறிஞ்சித்திணைப் பாடலில்.

"வான் பெயல் நனைந்த புறத்த, நோன்பியர்

கைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்"

மழை பெய்தால் நனைந்த குரங்கின் புறப்பகுதி. நோன்பு உடையவர் தைத்திங்களின்போது நீராடி நோன்பு முந்தியிருந்து பின்பு உண்ணுதல் போலத் தேன்றியது என்ற பொருளில் 'ஒப்ப' எனும் உருவினுவம உருபு தொகையாக, கிழக்கிடு பொருள் நிலைகளனில் பொருள் தந்துள்ளது (Balasubramniam, 2004).

## உள்ளுறை உமமம்

"பிறிதொரு படாது பிறப்பொடு நோக்கி

முன்னா மரபிற் காடறுங் காலைத்

துணிவொடு வருவுந் துணிவினோர் கொளினே"

உவமேயப் பொருள் தோற்றிய இடத்தொடு நோக்கி குறிப்பொடு பொருந்த. உம்மைச் சொல் அமையும் என்று இளம்பூரணர் விளக்கமளித்துள்ளார். உள்ளுறை உவமமும், உவமம்போலி போன்று வினை. பயன். மெய். உரு. உறுப்பு என்ற ஐந்து நிலைகளிலும் செய்யுள்களில் பொருளுணர்த்தும் (Ilampuranar, 2005).

"தகவலருஞ் சிறப்பின் தன்மை நாடின்

வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்

பிறப்பினும் வருவூம் திறத்த வென்ப" (Ilampuranar, 2005)

கணக்காயனார் இயற்றிய குறிஞ்சித்திணைப் பாடலில்

"முத்துப்படு பரப்பின் கொற்கை முன் துறைச்

சிறு பாசடைய செப்பு ஊர் நெய்தல்

தெண் நீர் மலரின் தொலைந்த

கண்ணே காமம் கரப்பு அரியல்வே"

நெருங்கிய நீர்மிக்க முத்துக்கள் தோன்றுகின்ற கொற்கை துறையிலிருக்கும் சிறிய பசிய இலைகளைக் கொண்ட அழகான நெய்தலின் தெளிந்த நீர் மலர் போன்றது தலைவியின் கண்கள். அழகு குழைந்து காமத்தை மறைக்க அரியனவாய் அமைந்தன என்ற பொருளில் உள்ளுறையாக தலைவியின் காதல் நிலையும், களவுகால வாழ்க்கைமுறையும் வெளிப்பட்டுள்ளது (Balasubramniam, 2004).

## முடிவுரை

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில் எச்சவியலில் குறிப்பிட்டுள்ள உவமைத்தொகையினைக் குறித்து பொருளதிகார உவமவியல் விரித்துரைத்துள்ளது. உவமவியல் கோட்பாட்டின் வாயிலாக உவமம், உவம உருபுகள், உவமவிரி, உவமத்தொகை, உள்ளுறை உவமம் போன்ற சிறப்புக் கூறுகள் நற்றிணையின் செய்யுள்களில் அதிக அளவில் பாடல் வரிகளில் பொருண்மை சேர்த்துள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடம் உவம உருபுகள் மட்டுமல்லாது பிற்கால இலக்கண நுற்களில் புதிய உருபுகளாக கூறப்படும் அனைய. ஆங்கு. இன. இன்ன. ஏய்க்கும் ஒத்து. கடுப்ப. புரையும். போல். மருள். மானும். உண் என கூறப்படும் உவம உருபுகளும் பாடல்வரிகளில் உவமநயம் உணர்த்துவதாக அமைந்துள்ளது. இவ்வாறாக நற்றினை இலக்கியமானது தனிச்சிறப்புமிக்க இலக்கியமாக. காலம் காலமாக நிலைத்திருப்பதற்கான முக்கிய காரணிகளில் ஒன்றாக உவமநயம் இடம்பெற்றிருப்பதையும். உவமத்தொகைச் சொற்கள் பாடல்களில் மறைவாக வந்து உவமநயங்களை கொடுப்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றத. இதனை கருத்தில்கொண்டு எதிர்காலத்தில் விரிவான இலக்கண ஆய்வாக விரித்துரைக்க இயலும் என்பதில் ஐயமில்லை.

## References

Balasubramniam, K.V. (2004) Natrinai Moolamum Uraium, NCBH, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiya Porulthigaram, Gowra Agencies, Chennai, India.

Janaki, R. (2011) Sanga Ilakkiya Pathivugal, Bharathi Publishing, Chennai, India.

Perasiyar, (2005) Tholkappiya Porulthigaram, Gowra Agencies, Chennai, India.

Vellaivaranar, (1917) Uvamaiyal Uraivalam, Madurai Kamaraj University, Madurai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License